**உடதும்பற பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடதும்பற பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடதும்பற பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாத ரூபா 151,200 ஆன செலுத்த வேண்டிய எரிபொருள் செலவினம் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 167,220 ஆன நூலகப் புத்தகங்கள் மூலதன வருமானம் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 141,403 கூட்டுத்தொகையான நூலகப் புத்தகங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீர் முன்மொழிவு முறைமை திருத்த செயற்திட்டமொன்றின் முன்னைய ஆண்டின் போது ரூபா 4,116,331 ஆன செலவினமொன்று மீளாய்வாண்டின் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | திரண்ட நிதியத்திற்கு தாக்கமொன்று இல்லை | ஆண்டிற்குரிய செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் முன்கொண்டு வரப்பட்ட சம்பள மீள்நிரப்பல் மீதிகள் ரூபா 155,239 தொடர்பான அட்டவணைகளும் கோவைகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 / 128 ஆம் பிரிவுகள் | சபையால் பயன்படுத்தப்படுகின்ற 23 மயானங்களின் உரித்து சபைக்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு அங்கீகாரத்திற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரித்து கையேற்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நியம உப உறுப்புரை) சட்டத்தின் விளம்பர அறிவித்தல் தொடர்பான உப உறுப்புரை | மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணப்பட்ட ரூபா 64,800 ஆன விளம்பர பதாதை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | நிலுவை விளம்பர பதாதை கட்டணங்களை அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,960,443 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,180,488 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணிப்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,937,400 | 1,842,187 | 1,942,132 | 720,884 | 4,224,100 | 1,788,912 | 1,370,404 | 820,830 |
| (ii) | வாடகை | 3,729,600 | 3,178,932 | 2,161,599 | 3,804,608 | 1,218,000 | 2,912,515 | 1,355,560 | 2,787,275 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 870,000 | 750,522 | 900,722 | 111,000 | 864,000 | 693,850 | 551,250 | 261,200 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,044,500 | 42,918,574 | 45,644,590 | 6,187,335 | 34,664,420 | 33,841,327 | 28,949,144 | 8,913,351 |
| | | 15,581,500 | 48,690,215 | 50,649,043 | 10,823,827 | 40,970,520 | 39,236,604 | 32,226,358 | 12,782,656 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 488,356 ஆக காணப்பட்டதுடன் அலகொன்றில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட வீதவரி நிலுவையான 21 ஆதனங்களில் ரூபா 187,084 ஆக இருந்தது. | ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி நிலுவை ரூபா 131,527 ஆக இருந்தது. இதில் கடந்த ஆண்டிற்காக ஹுன்னஸ்கிரிய ஹெயாபார்க்ஸ் அரச தோட்டக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 123,078 ஆக இருந்தது. இது மொத்த நிலுவையில் 94 சதவீதமாகும். | நிலுவை தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதிகளை அறவிட வேண்டும். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமி இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 130,832 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 5,013,880 ஆக இருந்தது. | நிலுவையைப் பெற்றுக் கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களைத பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதார அதிகாரியாக சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபைக்கு சொந்தமான 03 நீர் செயற்றிட்டங்களில் நீரின் மாதிரிகள் பரீட்சிக்கப்படாமல் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | நீர் மாதிரி பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை | குறித்த பரிசோதனைகளை மேற்கொண்டு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 07 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,768,375 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 3,637,639 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 211,031 ஆக இருந்தது. | எதிர்வரும் காலங்களில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ரூபா 12,179,486 ஆக இருந்தது அதில் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய ரூபா 7,533,074 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 312,096 ஆக இருந்தது. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் கொடுத்தார் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீயாய்வாண்டில் இறுதியில் காணப்பட்ட ரூபா 5,360,119 ஆன 22 சனசமூக மண்டபங்களும் 11 ஆசிரமங்களினதும் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பி உள்ளதுடன் எதிர் வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரித்து கை யேற்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,042,000 ஆன 03 வாகனங்களும் ரூபா 25,616,323 கூட்டுத்தொகையான 02 இயந்திரங்களும் 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | கைதவிர்க்கப்பட வேண்டியவையா அல்லது திருத்தம் செய்யப்பட வேண்டியதா என உள்ளூராட்சி மன்ற ஆணையாளுக்கு எழுத்து மூலம் விசாரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது புறநகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 42,560,398 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்நோக்கு கட்டிடத்தின் 02, 03, 04 மற்றும் 05 ஆம் இலக்க பாரிய அளவிலான கடைகளை உட்பட 4870 சதுர அடி அளவிலான இடமொன்றும் சபையின் கீழ் மாடியில் காணப்பட்ட | எதிர்காலத்தில் கேள்வி கோரி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தி வருமானத்தை உழைத்துக் கொள்ள வேண்டும். |

வாரச்சந்தை நடத்திய பகுதி வாரச்சந்தை நடத்தப்படாததன் காரணமாக கட்டிடம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் 02 விளையாட்டரங்குகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 20 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 08 மிகைகளும் காணப்பட்டன. | ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய வெற்றிட பதவிகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதுடன் மிகை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாவர். | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) 2018 ஜனவரி 24 ஆந் திகதி 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை இன் பிரகாரம் மனிதவளத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையும் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் உடன்படிக்கையில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 10 வருமான விடயங்களில் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 14 செலவின விடயங்களில் 23 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தப்படும். | கவனத்துடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப் பட்டிருந்ததுடன் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துதல் வேண்டும். |